Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 283
செவ்வாய்க்கிழமை 05 செப்ரெம்பர் 2023
ஆவணி 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## லிட்ரோ, லாப்ஸ் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 5
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லாப்ஸ் மற்றும் லிட்ரோ எரிவாயு »11

# புதைகுழி அகழ்வு மழையால் தாமதம்!!!

## நாளையே ஆரம்பமாகும்



புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்காக அமைக்கப்படும் கொட்டில்கள்

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 5

கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, இன்று செவ்வாய்க்கிழமை அதனை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இருநாள்களாகப் பெய்த மழை காரணமாக இன்று அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அகழ்வுப்பணி நாளைவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்டமருத்துவ நிபுணர் கலாநிதி க.வாசுதேவா தெரிவித்தார். »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி

ஈஸ்டர் தாக்குதல்

## இதுவரை தெரியாத இரகசியங்கள் இன்று வெளியிடுகிறது 'சனல்-4'!

கொழும்பு, செப். 5
இலங்கை தொடர்பான சர்ச்சைக்குரிய காணொலியை இன்று ஒளிபரப்பு ஏற்பாடு செய்துள்ளதாக பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி அறிவித்துள்ளது. »11

## க.பொ.த. (உ/த) பெறுபேறு நேற்று வெளியானது

யாழ். மாவட்டத்தில் கணித, உயிரியல் பிரிவின் முதல் 5 இடங்களும் யாழ். இந்துவுக்கு

யாழ்ப்பாணம், செப். 5
2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுப் பிற்பகல் வெளியாகின. யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னிலைப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. வவுனியாவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் முன்னிலை பெற்றுள்ளதாகத் »11

## இராணுவத் தளபதியாக சஞ்சய வனசிங்க?

கொழும்பு, செப். 5
இலங்கையின் 25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க நியமிக்கப்படவுள்ளார் என அரச உள்ளகத் தகவல்கள் »10

## செல்வம், சார்ள்ஸ், சிவாஜிக்கு நேற்று பிடியாணை பிறப்பிப்பு

யாழ்ப்பாணம், செப். 5
நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் »10

மனைவியைப் பழிதீர்க்க

## துப்பாக்கியோடு சிப்பாய் ஓட்டம்!

பளை முதல் மாங்குளம் வரை 'பரபர' துரத்தல்

கிளிநொச்சி, செப். 5
பளை, இயக்கச்சி இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் »11

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கூட்டணியினர் ஆதரிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், செப். 5
சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும் என கூட்டமைப்பின் அங்கத்துவக் »11

## மதுவிருந்தில் கைகலப்பு இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 5
மதுவிருந்து இடம்பெற்ற இடத்தில் இரு தரப்பினருக்கு இடையிலான மோதலில் கட்டி வைத்துத் தாக்கப்பட்டவர் யாழ். »10

## கையை அகற்றப்போவதை எமக்குச் சொல்லவேயில்லை!

சிறுமியின் பேரனார் தகவல்

யாழ்ப்பாணம், செப். 5
கிருமி கைகளுக்கு மேலே வரை சென்றால் முழுக் கையையும் அகற்ற வேண்டிவரும். எனவே மணிக்கட்டு வரை கையை அகற்றியுள்ளோம் என்று எங்களுக்கு கூறப்பட்டது. ஆனால் கையை அகற்றுவதற்கு முதல் எங்களுக்கு முழுமையாக எதுவும் »11

## சீரற்ற வானிலை 3 பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 5
நாட்டில் நிலவும் கடும் மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக மூவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். »11

## மீற்றர் வட்டியால் பெண் உயிர்மாய்ப்பு

தாயின் காலைத் தொட்டவாறு அழுதுகொண்டிருந்த 3 மாதக் குழந்தை

யாழ்ப்பாணம், செப். 5
மீற்றர் வட்டிக்கு பெற்ற கடனால் பெண்ணொருவர் வீடு, பணம், நகை அனைத்தையும் இழந்த நிலையில் தவறான முடிவெடுத்து நேற்று உயிர் மாய்த்துக் கொண்டுள்ளார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை - இந்திய மீனவர்கள்

# பிரச்சினைகளைத் தீர்க்க இணைந்த குழு அமைப்பு



புதுடில்லி, செப். 5

**இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு இணைந்த குழு மூலம் (ஜொயின்ட் கமிட்டி) தீர்வு கிட்டும் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள படகுகளை விடு விப்பது குறித்து நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இருநாட்டு அதிகாரிகள் ஒருங்கி ணைந்த கூட்டு நடவடிக்கைக் குழு வின் மூலம் மீனவர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தப்படும்.

இதற்குரிய பூர்வாங்க நடவடிக்கை கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயர்மட்டத்தில் பேச்சு நடத்தி உரிய தீர்வு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். நடுக்கடலில் ஏற் படும் பிரச்சினைகளில் இருந்து மீன வர்களைப் பாதுகாக்க, மீனவர்களின் உயிரிழப்பைத் தடுக்கும் வகையில் ஏர் அம்புலன்ஸ் (ஹெலிகொப்டர்) வசதி ஏற்படுத்துவது குறித்து பரி சீலனை செய்யப்படும் - என்றார்.

(ம-100)

# 30,000 மெற்றிக்தொன் கனியமணல் சீனாவுக்கு!

கொழும்பு, செப். 5

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 30 ஆயிரம் மெற்றிக்தொன் அளவுடைய பெருமளவிலான கனிய மணலை இலங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கை கனிப்பொருள் மனல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச அளவிலான கேள்வி மனுக்கோரல் ஊடாக சீன நிறுவனம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் இறங்குதுறையில் இருந்து அதனைக் கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த சில நாள்களாக இடம்பெற்றன. சீன நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் செயற்பட்டுள்ளது. கனிய மண் 65 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறு பெருந் தொகையில் ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும். (ம)

# பெரமுனவின் கைதியாக மாறியுள்ளார் ஜனாதிபதி

### முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, செப். 5

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை இதுவரையில் குறைக்க முடியவில்லை. ஜனாதிபதி சிறைக்கைதியாக மாறியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன. ஒன்று மொட்டுக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும். இல்லாவிட்டால் மொட்டுக் கட்சியி லிருந்து விலகி வெளியில் வரவேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த ஜனாதிபதி பொதுவேட்பாளர் ரணில் எனக் கூறுகிறார்கள். அவர் பொதுவேட்பாளர் அல்ல. ராஜபக்சக் களின் வேட்பாளர் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு அமைச்சர் கெஹலிய பொறுப்புக்கூறவேண்டும். மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துக் கொள்வனவு, அவசர மருந்துக் கொள்வனவு மாபியா என அமைச்சர் மீது பல்வேறு குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தரமற்ற மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் ஒப்புக் கொண்டுள்ளது. ஊழல்கள் நிரூபிக்கப்படும்போது முன்வந்து அவரே பதவி விலகியிருக்கவேண்டும். இருப்பினும் அவர் அவ்வாறு செய்யவில்லை. தற்போது நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது. மொட்டுக் கட்சியினர் அவருக்கு ஆதரவு வழங்கலாம், அவரைப் பாதுகாக்கலாம். ஆனால், மக்களை ஏமாற்ற முடியாது. தேர்தல் மூலம் இந்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் அடுத்த தேர்தலின்போது ரணி லுக்கு மொட்டுக் கட்சியினர் ஆதரவு வழங்குவார்கள் எனக் கூறுகிறார்கள். மொட்டுக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் வேறுபாடுகள் இல்லை. யார் எந்தக் கட்சி என்று எமக்கு விளங்கவில்லை. பொறுப்புகளில் உள்ளவர்கள் சுக போக வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆனால், நாட்டு மக்கள் மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்படுகிறார்கள். அன்றாடம் வாழ்க்கைச் செலவைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலையில் வாழ்கிறார்கள் - என்றார். (எ-இ)

# செப். 21, ரணில் ஐ.நா.வில் உரை!



கொழும்பு, செப். 5

முக்கியமான இரு சர்வ தேச மாநாடுகளில் பங் கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ளார்.

அமெரிக்கா, நியூ யோர்க்கில் நடைபெற வுள்ள ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வு மற்றும் கியூபாவின் ஹவானாவில் நடைபெறவுள்ள ஜி-77 மாநாட்டில் ஜனாதி பதி கலந்துகொள்கின்றார்.

முதலில் கியூபாவின் ஹவானா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜி-77 மாநாட்டில் பங்கேற்பார்.

இந்த மாநாடு முடிவடைந்த பின்னர் நியூ யோர்க் செல்லும் ஜனாதிபதி, ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் பங்கேற்க வுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதி பதி உரையாற்றவுள்ளார். (ம-44)

# எந்த அமைச்சையும் ஏற்கத் தயாரில்லை

### பொன்சேகா திட்டவட்டம்

கொழும்பு, செப். 5

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அல்ல இந்த ஆட் சியின் கீழ் எந்தவொரு அமைச்சையும் ஏற்பதற்கு நான் தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒட்டுமொத்த அரச பொறிமுறையும் மாறவேண்டும். அவ்வாறு மாறாமல் தனி ஒருவரால் அமைச்சுப் பதவி எடுத்து மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

எனக்கு வலிந்துவந்து அமைச்சுப் பதவி வழங்கினால் கூட இந்த ஆட்சியின்கீழ் அதனை ஏற்கமாட்டேன், நான் ஐக்கிய மக்கள் சக்தியில்தான் இருக்கின்றேன். தேவையான நேரங்களில் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றேன். மாறாக ஊடக அரசியல் நடத்த வில்லை - என்றார். (எ-44)

# வீதியில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸ்

யாழ்ப்பாணம், செப்.5

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய போக்கு வரத்துப் பொலிஸாரால் மீட்கப்பட்ட பணப்பை நேற்று உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

கடமையில் இருந்த பொலிஸார் மாதகல் பகுதியில் பணப்பை ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர்.

அதனுள் ஆவணங்களும், சுமார் 10 ஆயிரம் ரூபா பணமும் இருந்துள்ளது.

இது தொடர்பாக காங்கேசன்துறை பிராந்திய



சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகேவுக் குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவரது பணிப்புரைக்கு அமைய பணப்பையின் உரிமை யாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவல கத்துக்கு அழைக்கப்பட்டு, பணப்பை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-125)

# ஐ.தே.க. மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 5

எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி கொழும்பில் நடை பெறவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது சம்மேளனக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் கூட்டத் திகதியை மாற்ற வேண் டும் என்று கட்சி அமைப்பாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் முக்கிய மான வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபடுகின்றார், நாடு திரும்பிய பின்னர் பாதீடு உட்பட முக்கியமான பல பணிகள் உள்ளன.

அதனால் டிசெம்பர் மாதமளவிலேயே ஐ.தே.க. மாநாடு நடைபெறலாம் எனத் தெரியவருகின்றது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப் பதால் அதற்கான பரப்புரைக் கூட்டமாகக்கூட கட்சி மாநாட்டை ஐ.தே.க. நடத்தலாம் என எதிர்பார்க்கப்படு கிறது. (எ-44)

# 207.3 பில்லியன் ரூபா நாணயத்தாள் அழிப்பு

### சிதைவடைந்ததால் நடவடிக்கை

207.3 பில்லியன் ரூபா பெறுமதியான சிதைக்கப்பட்ட அல்லது சேதமடைந்த பணத்தாள்கள் கடந்த ஆண்டு அழிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தரமான மற்றும் சுத்தமான பணத்தாள்கள் நாட்டில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'மனிசருக்குத்தான் நேரகாலமெல்லாம். கடவுளுக்கு அதில்லை. காலத்தைக் கடந்தவர் தான் கடவுள்' எண்டு எக்கச்சக்கம் தத்துவங்களை எல்லாரும் சொல்லுறவை. என்டாலும் சில நேரங்களில கடவுளும் நேரகாலத்தைக் கடைப் பிடிச்சால், சனத்துக்கும் நல்லது. இப்ப நல்லூர் மாதிரி சில கோயில்களில ஒரு செக்கன்கூட பிசகாமல், நேரக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கினம். அதால கும்பிடப்போறவையும் சரியான நேரத்துக்குப் போய் வர முடியுது. ஆனால் சில கோயில்களில அப்பிடியில்லை.

கிட்டடியில ஒரு கோயில்ல தேர்த்திருவிழா. அதுவும் ஈழத்தில கடும் பேமஸான, யாழ்ப்பாணத்தில உள்ள கோயில்தான். அந்தக் கோயில்ல விடிய எட்டு மணிக்குத் தேர் இழுபடும் எண்டு அறிவிச்சிருந்தவை. தூர இடத்தில உள்ள சனங்களெல்லாம், விடிய வெள்ளென்னவே எழும்பி கோயிலுக்கு போகத் தொடங்கிட்டுதுகள். அந்தக் கோயிலுக்கு தேரைச் சும்மா சுத்திப் பார்த்துக் கும்பிடுற ஆக்களைவிடவும், பிரதட்டை, கற்பூரச்சட்டி, காவடி எண்டு நேர்த்திக்கடனுக்காண்டிப் போறவைதான் கூட. இப்பிடி கோயில்ல சனம் குவிஞ்சு கொண்டிருக்குதே தவிர எட்டு மணிக்கு தேர் இழுபடுறதுக்கான அசுமாத்தமேயில்லை. பிறகு 9 மணிக்கு இழுக்கப் போகினம் எண்டு அறிவிச்சினம். சரி, ஒரு மணித்தியாலம் தானே பிந்தப் போகுது, பரவாயில்லை எண்டு கும்பிடப்போனவையும், நேர்த்திக்கடன் செய்யப்போனவையும் மனசைத் தேத்திச்சினம். ஆனால் ஒன்பது பத்தாகி, பதினொண்டாகி, பதினொண்டரையாகத்தான் தேர் அசைஞ்சுது. தேருக்குப் பின்னால் பெரும் வரிசையில அந்தச் சுடுவெயிலுக்குள்ள வெறும் மேலோட பிரதட்டை செய்யிற ஆக்கள் அவ்வளவு நேரமும் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமில்லை. நேர்த்திக்கடன் செய்யப்போனால் இப்பிடி வெயில், மழை பாக்கக் கூடாது எண்டு ஆரும் சண்டைக்கும் வரக்கூடும். ஆனால், பதினொண்டரைக்குத்தான் தேர் இழுபடும் எண்டு முதலே அறிவிச்சிருந்தால், அவை இப்பிடி கொளுத்துற வெயிலுக்குள்ள உடம்பு அவிஞ்சு போறளவுக்கு வேதனைப்படத் தேவையில்லையே.

'வழக்கமாவே இப்பிடி சொன்னதைவிடவும் நேரம் பிந்தித்தான் அந்தக் கோயில்ல தேர் இழுக்கிறவை , அதால இது ஒரு பெரிய விசயமில்லை' எண்டு அங்க நிண்ட பக்தர்மார் சொல்லிச்சினம். ஆனால், இப்ப முந்தினமாதிரி காலநிலை இல்லை. எல்-நினோ எண்ட அனல் கொளுத்தியெறிய இந்தக் காலத்தில வெயிலுக்க போறதைக் குறையுங்கோ, தண்ணியை நல்லாக் குடியுங்கோ எண்டு எல்லாரும் அட்வைஸ் பண்ணிக் கொண்டிருக்கினம். அப்பிடிப்பட்ட ஒரு காலத்தில, இப்பிடி நேர்த்திக்கடனுக்கு வந்தவையையும், கும்பிட வந்தவையையும் இப்பிடி நேரத்தை மாத்திச் சொல்லி, வரவழைச்சு, வெயிலுக்குள்ள நிக்க வைக்கிறது சரியோ? இனியும் நிறையக் கோயில்களில திருவிழாக்கள் வரப்போகுது. அந்தக் கோயில்களையாவது, நேரந் தவறாமையைக் கடைப்பிடிச்சால் சனத்துக்கு நல்லது. சனம் நல்லா இருக்கோனும் எண்டு தானே சாமியும் விரும்புவார்?



- பட்சி

padsi@uthayan.com

# வீடு புகுந்து தாலி திருட்டு பெண்ணொருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 5

பண்டத்தரிப்பு - சித்தன்கேணி வீதியிலுள்ள வீடொன்றில் புகுந்து தாலிக்கொடியைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றம் எச்சரித்து பிணையில் செல்ல அனுமதித்தது.

இந்தச் சம்பவம் கடந்த 31ஆம் திகதி நடந்துள்ளது.

குறித்த பெண் சித்தன்கேணியில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில், வீட்டு மேசையில் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி காணாமற்போயிருந்தது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் பெண் ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தாலிக்கொடி தனியார் அடகு நிறுவனம் ஒன்றில் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு அடகு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸார் நீதிமன்ற அனுமதி பெற்று அந்த நகையை மீட்டதுடன், பெண்ணையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபருக்கு குழந்தை இருப்பதால் கடும் எச்சரிக்கையுடன் நீதிமன்றம் பிணை வழங்கியது. (எ-125)









## நல்வாழ்வு தருவான் நல்லைக் கந்தன்

சஞ்சலங்கள் தீர்ப்பான் சரவணபவன் –எம்
கண்ணீர் துடைப்பான் கார்த்திகேயன்
சந்தோசம் தருவான் செந்தூரன்
நல்லறிவு தருவான் ஞான வேலாயுதன்
குன்றா இளமை தருவான் குறிஞ்சிக் குமரன்
நாம் வாழ நல் வாழ்வு தருவான் நல்லைக் கந்தன்.

– மிஷாந்தி செல்வராஜா ஜெயசிங்கம்



# சேற்றில் புதைந்த யானை மீட்பு!

வவுனியா, செப். 5

வவுனியா, மாமடு குளத்தின் நீரேந்துப் பகுதியில், 5 வயது யானையொன்று சேற்றில் புதைந்திருந்த நிலையில், வனவள உயிரிகள் திணைக்களத்தினதும், இளைஞர்களினதும் கூட்டு முயற்சியால் பத்திரமாக மீட்கப்பட்டது.

வவுனியா, மாமடு குளத்தின் நீரேந்துப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற கிராமவாசி ஒருவர் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்குப் போராடுவதை நேற்றுமுன்தினம் அவதானித்துள்ளார். இதனையடுத்து மாமடு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் யானையை மீட்பதற்கான நடவடிக்கையை வனவள உயிரிகள் திணைக்களம், பொலிஸார் மற்றும் கிராமமக்கள் இணைந்து முன்னெடுத்தனர். சில மணிநேரப் போராட்டத்தின் பின்னர் யானை பத்திரமாக மீட்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு காட்டுக்குள் விடப்பட்டது. (ம-110)

# கட்டுப்பாட்டை இழந்த டிராக்டர் கால்வாயில்!

## சாரதி மருத்துவமனையில்

கிளிநொச்சி, செப். 5

உழவு இயந்திரம் கட்டுப்பட்டை இழந்து கால்வாய்க்குள் பாய்ந்ததால் சாரதி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, முரசுமோட்டையில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

காயமடைந்த சாரதி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் தனது 75ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ரி–20 கிரிக்கெட் ஆட்டத்தில் வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழகம் கிண்ணம் வென்றது. அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வை.எம்.எச்.ஏ. அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் மோதியது. (ம–20)

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1989 — மறைவு 04 . 09 . 2023



### ஜெயராசா அருள்பாலினி

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராசா அருள்பாலினி நேற்று (04.09.2023) திங்கட் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற தயாபரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராசா இந்திராவதி தம்பதியரின் மருமகளும், ஜெயராசாவின் (கஜன் அக்கூரியம்) அன்பு மனைவியும், வைஸ்ணவி, ஜனனி, ஜெயப்பிரபா ஆகி யோரின் தாயாரும், கிருபாலினி, ஜங்கரன் ஆகியோரின் சகோதரியும், ஜெயந்தி, ஜெயரஞ்சன் (கஜமுகன் ஸ்ரோர்ஸ்), ஜெயபிரகாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் மானிப்பாய் வீதி, இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26287) A-1

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கந்தசாமி



சூராவத்தை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தசாமி நேற்று (04.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தையற்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் இளைய மருமகனும், வனிதாமணியின் அன்புக் கணவரும், மதுசூதனன் (பிரான்ஸ்), பிரசன்னா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மினியின் அன்பு மாமனாரும், கவினயன், ஓவியன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஆனந்தனின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் மைத்துனரும், சசிரேகா, பிரபு, டக்சிகா ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற சிரோன்மணி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற ஜெயமணி, காலஞ்சென்ற ருக்குமணி மற்றும் வரதராஜன் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரகாந்தி, மேனகா, சகுந்தலை, பூங்கோதை, ரகுராமன், காலஞ்சென்ற சுகுமாரன் மற்றும் ஜெயக்குமாரன், சுகுணா, மஞ்சுளா, மோகனா, வசுந்தரா, காலஞ்சென்ற சாரதா மற்றும் பாலகுமாரன், காலஞ்சென்ற வசந்தினி மற்றும் குணசேகரன், மணிசேகரன், சுரேஸ்கரன், உமாமகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், பானுமதி, பாலமுருகன், பாலமுரளி, சாருமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26286) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 09 . 1936 — மறைவு 17 . 08 . 2022



### அமரர் நமசிவாயம் கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் – பொலிஸ் நிலையம் – மட்டக்களப்பு)

திதி:– 05.09.2023

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

246, கைதடி வடக்கு,
கைதடி.

நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

(CS/26274) AH-I

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 09 . 1934 — மறைவு 04 . 09 . 2023



### திருமதி P.M.அழகரட்ணம்

(ஓய்வுநிலை ஆசிரியை, யா/வேலணை மத்திய கல்லூரி,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி P.M.அழகரட்ணம் அவர்கள் நேற்று (04.09.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. அழகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான திரு.புஸ்பராஜா மகேந்திரன் சிதம்பரப்பிள்ளை, புஸ்பராணி திருநாவுக்கரசு (ராணி) மற்றும் புஸ்பதேவி சிதம்பரப்பிள்ளை (ரஞ்சி), புஸ்பாமிர்தம் சபாரட்ணம் (பபா), காலஞ்சென்ற புஸ்பாலயம் சிவகுருநாதன் (ஞானம்) மற்றும் சறோஜினி சுப்பிரமணியம் (பிள்ளை), ஸ்டிவன் புவேந்திரன் (இந்திரன்), காலஞ்சென்ற புவி சிதம்பரப்பிள்ளை (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 40/2, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (06.09.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆராதனைகளின் பின் நல்லடக்கத்திற்காக தூய திருமுழுக்கு யோவான் ஆலய கல்லறைத் தோட்டத்திற்கு (சென் ஜோன்ஸ் ஆலயம்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/2, கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
தி.கதிர்காமநாதன்
(பெறாமகன்)

(CS 26288) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொல்லப்படும் நீதி!

இலங்கையில் நீதித்துறை முன்னெப்போதும் இல்லாத நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. சட்டவாக்கத் துறையும் (நாடாளுமன்றமும்) நிறைவேற்றுத்துறையும் (ஜனாதிபதியும்) இணைந்து நீதித்துறையின் மீது மேற்கொள்ளும் அழுத்தங்கள் நாட்டையும் நாட்டின் நீதிக்கட்டமைப்பையும் இறையாண்மையையும் பலவீனப்படுத்தும் என்பதாக வலியுறுத்தியிருக்கின்றனர் ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய, ஜயம்பதி விக்கிரமரட்ண மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர்.

நீதித்துறையில் நீதிமன்றக் கட்டமைப்புக்குள் உட்பட்டிருக்கும் நீதிபதிகளோ – நீதவான்களோ ஊடக சந்திப்புகளையும், ஊடக அறிக்கைகளையும் மேற்கொள்ள – வெளியிட முடியாது என்ற அடிப்படை நிபந்தனைகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு பின்பற்றப்படும் நிலையில், ஜனாதிபதி சட்டத்தரணிகள் வெளிப்படுத்தியுள்ள இந்த 'ஓரணி எதிர்ப்புக் குரல்' மிகக் கனதியானது. ஆதலால், நீதித்துறையின் 'அவலக் குரலாக' இதை ஏற்று – கிரகித்து – நியாயம் பெற்றுக் கொடுக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கும், நாடாளுமன்றத்துக்கு வெளியே பொதுமக்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கும் நிறைந்திருக்கின்றது.

உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு விவகாரத்தில், ஒட்டுமொத்த நீதிக்கட்டமைப்பும் இந்த நாட்டின் சட்டவாக்கத் துறையாலும், நிறைவேற்றதிகாரத்தாலும் பந்தாடப்பட்டது. இது விடயத்தில் கருத்துச்சொல்லவோ – தீர்ப்பிடவோ நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்ற தோரணை நாடாளுமன்றத்தில் வலுவாகவே தென்பட்டது. ஜனாதிபதியும் இந்தத் தோரணையின் பாற்பட்டுத்தான் மேற்படி மறுசீரமைப்புக்களை முன்னெடுத்தார். ஆக, நாட்டின் உயர் அதிகார பீடங்களால் உச்சபட்ச அதிகாரமீறல் பொதுப்பாடாக மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பால் பொதுமக்கள் சொல்லொணா பாதிப்புகளை எதிர்கொள்வார்கள் என்று நிபுணர்கள் எச்சரித்த பின்னர், அந்த மறுசீரமைப்புப் பணிகளைச் சவாலுக்கு உட்படுத்தக்கூடிய அத்தனை ஏதுநிலைகளையும் இல்லாமலாக்கிவிட்டு ஒரு தீர்மானம் கையாளப்படுகின்றது என்றால் அது எவ்வாறு ஜனநாயகமாகும். ஆதலால்தான், கடன் மறுசீரமைப்பு விடயத்தில் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அரங்கேற்றப்பட்ட 'முன்னெழுதப்பட்ட நாடகங்கள்' ஒரு ஜனநாயகக் கொலையாக அமைகின்றன.


இலங்கையின் நீதிக்கட்டமைப்புக்கு விடுக்கப்படும் உச்சக்கட்ட சவால்களுக்கான ஒரு சிறு எடுத்துக்காட்டுத்தான் இது. இதன் முழுமையான பட்டியல் முடிவிலியாகத் தொடரும். நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர, முல்லைத்தீவு – குருந்தூர்மலை விவகாரத்தில் நீதியின் பாற்பட்டு தீர்ப்பிட்ட மதிப்புக்குரிய நீதிபதியை, 'ஒரு மனநோயாளி' என்று அடையாளப்படுத்தும் இழிசெயலும் இதே நாடாளுமன்றத்தில்தான் அரங்கேறுகின்றது. இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'சிறப்புரிமை' எவ்வளவு பாரதூரமாக நீதித்துறையை அவமதிக்கின்றது – துகிலுரிகின்றது என்பதற்கு முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெளிப்படுத்தும் வசைமழை ஆகப்பெரிய உதாரணம்.

உண்மையில் வேறெந்த நாடும் இவ்வளவு பாரதூரமாக நீதித்துறையை அவமதித்ததில்லை. கருத்துகளை கருத்துக்களாலும், சட்டத்தை சட்டத்தின் ஊடாகவும் எதிர்கொள்வதே ஜனநாயக அம்சம் பொருந்திய நாட்டுக்கு உகந்ததும் அழகும். உலகின் பழமைவாய்ந்த ஜனநாயக நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவில், முன்னாள் அதிபராக ட்ரம்ப் செயற்பட்ட காலங்களில் அவர், அகதிகள் நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்தார். உலகில் இடம்பெறும் பெரும்பாலான போர்களில் அமெரிக்காவின் தலையீடு இருக்கின்றது. அகதிகளின் தோற்றுவாயாக அமெரிக்காவே திகழ்கின்றது. போர்களை ஏற்படுத்தி அகதிகள் உருவாகக் காரணமாக இருந்துவிட்டு, அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழையக்கூடாது என்றால் அது எவ்வகையில் நியாயம். ஆதலால், ட்ரம்பின் முடிவுக்கு எதிராக தன்னார்வலர்களும் நீதியின் பாற்பட்டுச் செயற்படுபவர்களும் இணைந்து சான் பிரான்ஸிஸ்கோ நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். உடனடியாக ட்ரம்பின் உத்தரவை சான் பிரான்ஸிஸ்கோ நீதிமன்றம் தன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் செல்லுபடியற்றதாக்கியது. நாட்டின் தென்பகுதியூடாக அகதிகளை அரவணைத்தது அமெரிக்கா. இதுதான் ஜனநாயகம். ஒரு நாட்டின் அதிபரே ஆனாலும், அவர் நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர். இந்தக் கோட்பாடு எங்கெல்லாம் பின்பற்றப்படுகின்றதோ அந்த நாடு வாழும் வளரும். நீதி மீதான படுகொலைகள் ஒருவகையில் தற்கொலைகள்தான்.

**நாளொரு நல்வார்த்தை**

**காலம் விடயங்களை மாற்றுகிறது என்று எப்போதும் கூறுகிறார்கள்;**
**ஆனால், உண்மையில்**
**நீங்கள்தான் அவற்றை மாற்றவேண்டும்.**

**- வோர்ஹோல் -**




# வடக்கு மக்களின் ஆதரவு எமக்கே!

## கூறுகிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



**கொழும்பு, செப். 5**

**சுதந்திரக் கட்சியால்தான் தமக்கு ஏதேனும் நன்மை நடந்தது என்பது வடக்கு மக்களுக்குத் தெரியும். அதனால்தான் அன்றும் இன்றும் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்கிவருகின்றனர் என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் கட்சியானது இனவாத, மதவாத, வர்க்க வேறுபாடு அற்ற கட்சியாகும். அனைவரும் அங்கம் வகிக்கக்கூடிய கட்சியாகவும் திகழ்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் கொப்பேகடுவ அன்று தோல்வி அடைந்தாலும் வடக்கில் சுதந்திரக் கட்சிக்குத்தான் கூடுதல் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. எமது கட்சியின் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் வடக்குக்குச் சென்றபோது தமிழ் மக்கள் அவரை அன்புடன் வரவேற்றனர். தமக்கு ஏதாவது நன்மை செய்த கட்சிதான் சுதந்திரக் கட்சி என்பது அந்த மக்களுக்குத் தெரியும். இனவாதம், மதவாதம் அற்ற கட்சி என்பதால்தான் அனைத்து இன மக்களும் வரவேற்கின்றனர், புதிய கட்சிகள் உதயமாகலாம். வளரும் வேகத்திலேயே அது அழியலாம், சுதந்திரக் கட்சியை எவராலும் அழிக்க முடியாது - என்றார். (ம-44)




# தமிழ்க் கூட்டமைப்புக்குள் இன்று பல்வேறு பிளவுகள்

## நிமால் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இன்று பிளவு ஏற்பட்டுள்ளது. எனவே, எந்தவொரு கட்சிக்குள்ளும் பிளவு இல்லை எனக் கூறமுடியாது. காலைவார முற்படுபவர்கள் தொடர்பில் விழிப்பாக இருந்து முன்னோக்கிப் பயணிப்பதற்குத் தயாராகவேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரான அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் கட்சியாக நாம் இன்று ஒன்றுபட்டுள்ளோம். இத்துடன் நின்றுவிடாது அனைவரும் ஒன்றுபட்டு கொள்கைத் திட்டங்களை உருவாக்கவேண்டும். பூகோள அரசியலின் தன்மை அறிந்து செயற்படவேண்டும். அதேபோல நவ யுகத்துக்கேற்ப கொள்கைத் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். இணைந்து பயணித்து ஏனைய கட்சிகளுக்கு முன்மாதிரியாக சுதந்திரக் கட்சி திகழ வேண்டும் - என்றார். (ம-44)

**நாளை**

06.09.2023
புதன்கிழமை
ஆவணி 20

சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம் : 12.04 - 01.34

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென்மராட்சிப் பிரதேச பாரம்பரிய விளையாட்டு

சாவகச்சேரி, செப்.5

தென்மராட்சிப் பிரதேச பாரம்பரிய விளையாட்டு விழா அண்மையில் கச்சாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் விளையாட்டு விழா நடைபெற்றது. அதில் கச்சாய், பாலாவி ஆகிய கிராமச் சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர், கச்சாய் மகா வித்தியாலய அதிபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-9)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும்.

இழுத்துப் பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபாய்

**077 334 1281**

## டயானா அணிந்த உடைகள் ஏலம்

வொஷிங்டன், செப். 5

இளவரசி டயானா அணிந்த 3 ஆடைகள் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் விரைவில் ஏலத்தில் விடப்படவுள்ளன.

1997ஆம் ஆண்டு டயானா விபத்தில் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் தொண்டு நிறுவனங்கள் சிலவற்றுக்காக தமது 70 ஆடைகளை ஏலம் விட்டிருந்தார். அதில் 3 ஆடைகளை ஏலம் எடுத்த மிச்சிகனை சேர்ந்த எலன் பெத்தோ என்ற பெண் மணி அண்மையில் காலமானார். இந்தநிலையில் அவரிடமிருந்த டயானாவின் உடைகள் மீண்டும் ஏலத்தில் விடப்படவுள்ளன. (ச-இ)



### துயர் பகிர்கின்றோம்

எமது சக ஆசிரியை **திருமதி.கலிஸ்ரா கிறிஸ்ரி ஜோய்** அவர்களின் அன்புத் தாயார்.

**திருமதி லூர்தம்மா ஞானப்பிரகாசம்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**

**புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்.**

(CS 262841)A-1

### வேலைவாய்ப்புக்கள்

**சர்வதேச காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.**

- அரச ஊழியர்கள்,
- தனியார் துறையில் பணிபுரிவோர்,
- சுயதொழில் செய்வோர்,
- இல்லத்தரசிகள்,
- மேலதிக வருமானத்துக்கான தேவை உள்ளோர்

அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

**வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் - நெல்லியடிக் கிளை**

- எழுதுவினைஞர் (Under writer)
- உதவி முகாமையாளர்
- குழுத் தலைவர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இலக்கம் : JF/1049**

**உதயன் பணிமனை,**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

1. சரவணமுத்து சிவநாதன்
2. சிவநாதன் சிவரூபன்
   இருவரும் மீசாலை கிழக்கு.
   மீசாலை.

**மனுதாரர்**

வழக்கு இலக்கு: நம்பிக்கைச் சொத்து : 45/23

**எதிர்**

1. இலங்கை மின்சாரசபை.
   No: 50, Sir Chittampalam
   A Gardiner Mawatha,
   Colombo 02.
2. பிரதேச மின் பொறியிலாளர்.
   இலங்கை மின்சாரசபை.
   யாழ் கிழக்கு.

**எதிர்மனுதாரர்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர்களால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நம்பிக்கைச் சட்டம் பிரிவு 38(1)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் ஆதன அட்டவணையில் விவரிக்கப்படும் பன்றிக்கேணி கந்தசாமி ஆலயத்திற்குச் சொந்தமான ஆதனத்தை ஆலயத்தின் நலன் மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள எதிர்மனுதாரர்களுக்கு குத்தகை கொடுப்பதற்கு அனுமதி கோரி மனுதாரர்களால் கௌரவமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குடியியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 16இன் கீழான பகிரங்க அறிவித்தலினை பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு கௌரவ மன்று பிறப்பித்த கட்டளைக்கு இணங்க இவ்வாதனத்தில் உரிமையுள்ளவர்கள். அக்கறையுடைவர்கள் எவரேனும் தமது உரிமையை நிலை நாட்டுவதற்கு ஏதுவாக ஆட்சேபனையை 2023ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இம்மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். தென்மராட்சிப்பகுதி தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு. சாவகச்சேரி நகரசபை. சாவகச்சேரி கோவிற்பற்று. மீசாலைக்குறிச்சியிறை. கிராம சேவகர் பிரிவு J/318 "கட்டையடி" நில.பர 7. இது இப்போ ஆட்சிப்படியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் அளந்து வரையப்பட்ட 3769ம் இலக்கமும் 2012.08.30ம் திகதியும் கொண்ட அளவைப்படத்தின்படியும் நில.பர எட்டும் குளி ஒன்று தசம் ஆறு ஆறு (நில.பர 8 குளி 1.66) இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும்- தரணீஸ்வரன் பெண் ஜெயந்திக்குரியவாதனம் வடக்கு அல்லாரை வீதி மேற்கு பரமநாதன் நவரத்தினத்தின் உரிமைக்காரருக்குரியவாதனம் இவ் எல்லைக்குட்பட்ட நிலம். செய்பயிர்கள் வான்பயிர்கள் அடங்கலும்.

2023ம் ஆண்டு புரட்டாதி மாதம் 01 ஆம் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்.
சாவகச்சேரி.

வரைபு
மனுதாரர்களின் சட்டத்தரணி
(டொ.மதுமிதா)

**VACANCIES @ BLC Campus Jaffna**

We are looking for enthusiastic candidates for the following vacancies



**1. Enrolment Excecutive**

- Age limit between 18 to 35 Years
- Should possess good interpersonal skills
- Should be able to work on Weekends
- Should participate in Students' enrollment activities
- Attractive Salary packages will be offered
- Prior Experience in The Similar Positions will be an added advantage.

**2. Course Coordinator**

- Should possess Higher Diploma or Degree Qualification
- Be fluent in English
- Should be able work independently
- Must be able to coordinate academic activities and handling documents
- Familiar to work with MS Office, Internet & Email

**How to Apply:**
**Please forward your detailed CV indicating the post applied with the details of two non-related info@blccampus.com**

BLC CAMPUS

No:86, Kachcheri Nallur Road, Jaffna.
T - 021 222 3355


E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் காற்றால் மரங்கள் அழிவு

அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் வீசும் கடும் காற்றினால் வாழை, பப்பாசி, முருங்கை உள்ளிட்ட மரங்கள் முறிந்து விழுந்துள்ளன என்று பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். அறுவடைக்குத் தயாராக இருந்த நிலையில் வாழைக்குலைகள் மற்றும் பப்பாசி மரங்கள் முறிந்து விழுவதால் தமது வருமானம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ம-ரி2-9)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி.கலிஸ்ரா கிறிஸ்ரி ஜோய் அவர்களின் அன்புத் தாயார்.

**திருமதி லூர்தம்மா ஞானப்பிரகாசம்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

(CS 26285)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 09 1951



மறைவு 03 09 2023

### சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தி ரஞ்சன்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தி ரஞ்சன் அவர்கள் 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் ஏரம்பமூர்த்தி, கௌரி ஏரம்பமூர்த்தி தம்பதிகளின் அன்பு மகனும், வசந்தன், காலஞ்சென்ற அசோகன், திருமதி வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ஜெயராணி, திருமதி நவமலர், திரு ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும், டர்ஷான், ஹரங்காசுதன், ஹரிகாலன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், கேசிகன், சரண்யை ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் செவ்வாய்க்கிழமை (05.09.2023) மாலை 5 மணிமுதல் 9 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, புதன்கிழமை (06.09.2023) காலை 9 மணியளவில் ஈமைக்கிரியைகளுக்கான நிகழ்வுகள் ஆரம்பமாகி, மாலை 5 மணியளவில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு
ஸ்ரீதரன் (மைத்துனர்) - **0773793368**
கேசிகன் (மருமகன்) - **0777750261**

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தனபாலசிங்கம்



பிறப்பு:25.05.1946 இறப்பு:03.09.2023

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு கலா ஸ்ரோர்ஸ் பங்காளரும், கொழும்பு-10 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகராசா (மணி), சிவராசமதி (மதி), சிவகாமசுந்தரி (ஆனந்தி), செல்வராணி (ராணி-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புஸ்பவதி, காலஞ்சென்ற நவரத் தினம் (நவம்), காலஞ்சென்ற மணிவாசகம் (செட்டி), துரைராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கம்சன், நளினி (கனடா), தட்சன், ஜீவிதன், யாழினி (அமெரிக்கா) ஆகியோரின் சிறிய தந்தையும், உதயமலர் (கனடா), சிவகுமார் (சுவிஸ்), சோதி மலர் (சுவிஸ்), பிரமிளா (சுவிஸ்), சூரியகுமார் (ஜேர்மனி), பிரகாசன், பிரியந்தினி (கனடா), கீர்த்தீபா (ஆசிரியை - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), சதீஸன், சிந்துஷன் (சுவிஸ்), துஷா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

பார்வைக்காக - 05.09.2023 மு.ப. 10.00 - பி.ப 4.00 மணிவரை
06.09.2023 மு.ப. 10.00 - பி.ப 1.00 மணிவரை

பொரளை செமென்டரி (Borella Cemetery) அருகில் Jayaratne funeral Directors (Pvt) Ltd, 2B Elvitigala Mawatha, Colombo-8 எனும் முகவரியில் வைக்கப்பட்டு, அன்னாரின் இறுதிக்கிரியைள் நாளை (06.09.2023) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு இடம்பெற்று, பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சிவராசமதி (ம.தி) - 0777 387 448**
**சிவகாமசுந்தரி (ஆனந்தி) - 076 8329 308**
**செல்வராணி (ராணி-சுவிஸ்) - 0041 7628 59283**

**தகவல்: சகோதரர்கள்**

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29.12.1939

விண்ணில் 06.09.2012

### அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

திதி: 05.09.2023

ஆண்டுகள் பதினொன்று ஓடி மறைந்ததுவே
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
எமை அவனியிலே சிறப்பாக வாழ வைத்த
எமதன்பு அப்பாவே!
எத்துயர் கண்டும் தளராத நெஞ்சமும்

நிமிர்ந்த கம்பீர நடையும் என்றும்
எம் மனக்கண்ணில் நீங்காது உள்ளது
உங்களுக்கு நிகர் இனி யார் அப்பா!
விண்ணுலகில் தெய்வமாக என்றும்
எமை ஆசீர்வதித்து வழிநடத்துங்கள்.

**41/17, பாடசாலை வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

(CS/51943)AH-1

**உங்கள் பிரிவால் துயருறும்,**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

மண்ணில் 20 . 06 . 1950



விண்ணில் 03 . 09 . 2023

### பாலநாதன் சர்வேஸ்வரி

தண்ணீர்த்தாழ்வு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலநாதன் சர்வேஸ்வரி கடந்த (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பாலநாதனின் அன்பு மனைவியும், உதயணி (ஜேர்மனி), உஷாயினி (பிரான்ஸ்), தனுசியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோணேஸ்வரன், கண்ணதாசன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியேஸ்வரி, ஞானேஸ்வரி, கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கபிலாஷ், சோபிகா, தோஷிகா, கபில்ராஜ், சயின்ராஜ், அஜய், ஆகாஷ், கபிஷா, செரீனா, சமீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குணரத்தினம், காலஞ்சென்ற பொன்னம்பலம், பாக்கியநாதன், காலஞ்சென்ற சண்முகநாதன், செல்வரத்தினம், தவத்துரை, சிறீதர், திலகவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தண்ணீர்த்தாழ்வு, கட்டுவன்.** (CS/51974)AH-1 **தகவல் : குடும்பத்தினர்.**

**சிறீதர் - 077 252 7843, ஞானேஸ்வரி - 076 944 6815**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் ஊடக அனுசரணையில் நடைபெற்ற

# யு.கே. கழகத்தின் தொடரில் பயர் கிரக்கேர்ஸ் சம்பியன்!



யாழ்ப்பாணம், செப். 5

உதயன் ஊடக அனுசரணையில் யு.கே. கழகம் நடத்திய யு.கே. பிரீமியர் லீக் - 20 தொடரில், பயர் கிரக்கர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் காங்கேயன் காளைகள் அணியை எதிர்த்து பயர் கிரக் கேர்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காங்கேயன் காளைகள் அணி 9.2 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. அபிலாஸ் 16 ஓட்டங்களையும், டிலக்சன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டெஸ்மன் 3 இலக்குகளையும், சர்மிலன் மற்றும் உமைசுதன் இருவரும்தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

70 ஓட்டங்களை இலக்காகக்கொண்டுகளமிறங்கியபயர் கிரக்கேர்ஸ் அணியினர் 9.1 ஓவர்களில் 71 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. பவன் அதிகபட்சமாக 26 ஓட்டங்களையும், லக்சன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரகுகரன் 3 இலக்குகளையும், பவிசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.மாலையில் குடும்பத்தினருடன் சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வியாபாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமானநாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

# வடக்கில் இன்று சீரான வானிலை

கொழும்பு, செப். 5

வடக்கு மாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:- கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மழையுடன் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படகூடிய ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றுள்ளது. (ம)


## உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா ?




**உதயன் ஊடகப் பயிற்சி - 2023**

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் ஊடக அனுசரணையில் இடம்பெறும்

# தென்மராட்சிக் கிண்ண கிரிக்கெட்டின் அண்மைய ஆட்டங்களின் முடிவுகள்!

யாழ்ப்பாணம், செப். 5
உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத்தொடரில்அண்மையில்இடம்பெற்ற ஆட்டங்கள்சிலவற்றின்முடிவுகள்-

**கைதடி கிரிக்கெட் கிளப் வெற்றி**
சங்கா ஸ்மார்சஸ் மற்றும் கைதடி கிரிக்கெட் கிளப் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் கைதடி கிரிக்கெட் கிளப் வெற்றிபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்மார்சஸ் அணி 10 ஓவர்களில் 90 ஓட்டங் களைப் பெற்றது. சாகித்தியன் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப்பெற்றார். பதிலுக்குஆடிய கைதடி கிரிக்கெட் கிளப் அணி 9 ஓவர்களில் 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

**ஸ்கை வோக்கர்ஸ் வெற்றி**
சாவா சுப்பர் கிங்ஸ் எதிர் கைதடி ஸ்கை வோக்கர்ஸ்அணிகளுக்குஇடையிலான ஆட்டத்தில் கைதடி ஸ்கை வோக்கர்ஸ் அணிவெற்றிபெற்றது.
முதலில்துடுப்பெடுத்தாடியஸ்கைவோக்கர்ஸ் அணி 9.4 ஓவர்களில் 10 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. 85ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சாவா சுப்பர் கிங்ஸ் அணி 82 ஓட்டங்களைப் பெற்றதையடுத்து 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஸ்கை வோக்கர்ஸ் அணி.

**ஸ்மார்சர்ஸ் வெற்றி**
லவ்லி சாவா எதிர் சங்கத்தானை ஸ்மார்சஸ்அணிகளுக்கு இடையிலானஆட்டத்தில் ஸ்மார்சர்ஸ் அணி அபார வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றஸ்மார்சஸ்அணி8 இலக்குகளை இழந்து 72 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாகசசி18 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில் நிதர்சன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
73 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய ஸ்மார்சர்ஸ் அணி 8 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து73ஓட்டங்களைப்பெற்று3இலக்குகளால் வெற்றிபெற்றது. சாகித்தியன் அதிகபட்சமாக 30 ஓட்டங்களைப் பெற்றார்.

**கைதடி சுப்பர் கிங்ஸ் மிகப்பெரிய வெற்றி**
கைதடி கிரிக்கெட் கிளப் எதிர் கைதடி சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்றில் கைதடி சுப்பர் கிங்ஸ் அணி அபாரவெற்றிபெற்றது. முதலில்துடுப்பெடுத்தாடியகைதடிசுப்பர்கிங்ஸ்அணிலதுஜன் அதிரடியாக ஆடி ஆட்டமிழக்காது பெற்ற 91 ஓட்டங்களின் உதவியுடன் 10 ஓவர்களில் 4 இலக்கை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.
143 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி இலக்கோடு ஆடிய கைதடி கிரிக்கெட் கிளப் 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து கைதடி சுப்பர் கிங்ஸ் 74 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

**சாவா சுப்பர் கிங்ஸ் வெற்றி**
லவ்லி சாவா எதிர் சாவா சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சாவாசுப்பர்கிங்ஸ்வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய லவ்லி சாவா அணி 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து78ஓட்டங்களைப்பெற்றது. அதிகபட்சமாக அமல் 26 ஓட்டங்களையும், அருண் 24 ஓட்டங்களையும் பெற்றனர். 79 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சாவா சுப்பர் கிங்ஸ் அணி 9.1 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து80ஓட்டங்களைப்பெற்று3இலக்குகளால் வென்றது.

**ஸ்மார்சர்ஸ் வெற்றி**
சங்கத்தானை ஸ்மார்சஸ் எதிர் கைதடி சுப்பர் கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஸ்மார்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.
முதலில்துடுப்பெடுத்தாடியசங்காஸ்மார்சஸ்அணி10 ஓவர்களில்8 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக சாஜீசன் 20 ஓட்டங்களைப் பெற்றார்.
56 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியகைதடிசுப்பர் கிங்ஸ் அணி 6.3 ஓவர்களில் அனைத்துஇலக்குகளையும்இழந்து35 ஓட்டங்களையே பெற்றது. சாவா ஸ்மார்சஸ் 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

**ரொக்கர்ஸ் வெற்றி**
நுணாவில் ரொக்கர்ஸ் எதிர் சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ரொக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது.
முதலில்துடுப்பெடுத்தாடியஸ்ரோம்பைட்டர்ஸ் அணி 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக பிரகாஸ் 27 ஓட்டங்களைப் பெற்றார்.
52 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கியரொக்கர்ஸ்அணி5.5ஓவர்களில்5 இலக்குகளைஇழந்து52ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. மாலவன் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

**வென்றது ஈகிள்ஸ்**
கச்சாய்ஈகிள்ஸ்எதிர்மட்டுவில்பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பைட்டர்ஸ் அணி 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மாதங்கன் 18 ஓட்டங்களைப் பெற்றார். 82 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கச்சாய் அணி 8.4 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப்பெற்று 4 இலக்குகளால் வெற்றிபெற்றது.

**கைதடி கிரிக்கெட் கிளப் வெற்றி**
சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் எதிர் கைதடி கிரிக்கெட் கிளப் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் கைதடி கிரிக்கெட் கிளப் அணி வெற்றிபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கா ஸ்ரோம் அணி 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கலையரசன் 22 ஓட்டங்களைப்பெற்றார்.
64 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கைதடி கிரிக்கெட் கிளப் அணி 7.4 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. டிலேசன் 23 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். (ம)

## மதுவிருந்தில்...
போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி, உழவனூரைச் சேர்ந்த செல்வகுமார் ஜெகதீஸ்குமார் (வயது-28) என்பவரே உயிரிழந்துள்ளார்.
எழுதுமட்டுவாழில் கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சி, உழவனூரைச் சேர்ந்த மூவர் மது அருந்துவதற்குச் சென்றுள்ளனர். அதேயிடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கிளிநொச்சியிலிருந்து வந்தவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டு, சிலர் ஜெகதீஸ்குமாரை கட்டி வைத்து அடித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைகலப்பு தொடர்பில் ஜெகதீஸ்குமார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார். திடீரென அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(அ-ஔ.9.27.113)

## செல்வம்,...
எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.
இலங்கையின் சுதந்திரத் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கரிநாள் பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் யாழ். நகர மேயர் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் முன்னிலையாகவில்லை. இதனையடுத்து அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஔ.5)

## இராணுவத்...
தெரிவிக்கின்றன. இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விகும் லியனகேவின் சேவைகால நீடிப்பு எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.
மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க எதிர்வரும் ஒக்ரோபர் 13 ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார். எனினும், சஞ்சய வனசிங்கவுக்கு சேவைக்கால நீடிப்பை வழங்கி, விகும் லியனகேவுக்குப்பின்னர் அவரை இராணுவத் தளபதியாக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.
முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் மூத்த மகனான, சஞ்சய் வனசிங்க இராணுவத் தளபதியானால் அது உலக சாதனையாக அமையலாம் என இராணுவ நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். தந்தையும், மகனும் இராணுவத் தளபதியாக இதுவரை எந்தவொரு நாட்டிலும் பதவி வகித்தில்லை எனக் கூறப்படுகின்றது. (அ-ஔ.22)


## மரண அறிவித்தல்



திருமதி சரவணமுத்து குஞ்சுப்பிள்ளை

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குஞ்சுப்பிள்ளை சரவணமுத்து நேற்று (04.09.2023) திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் அமரர் பொன்னம்பலம் சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும், வள்ளிப்பிள்ளை செல்லமுத்து ஆகியோரின் சகோதரியும், மயிலு நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான பொன்னம்பலம் தம்பதியரின் மருமகளும், அமரர் கலாநிதி கலாநந்தன், கலாசினி, கலாநாதன் கலாரதி, ரசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினி, தெய்வேந்திரன், நந்தினி தவலிங்கம், ரகுதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகன், கானுசன், கானுசா, கஜானி, அனுசியா நிரோசன் கௌசிகன் அர்ச்சனா, அபிசேக், அபிநயா, கார்த்திகன், நிதர்சனா, சௌமியா, சரணியா, மகதி அவந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொம்பிகுளம் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கலாநந்தன், கலாநாதன்
(மகன்மார்)
077 9797 418
077 800 9830

தெய்வங்கேணி வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(CR 46093) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைகுழி...

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மத்தியில் கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பான அகழ்வுகளை முன்னெடுப்பதற்கு நிதியின்மையால் தாமதம் ஏற்பட்டிருந்தது. நீதி அமைச்சால் நிதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதைகுழி அகழ்வை இன்று முன்னெடுப்பதற்கு கடந்த வாரம் நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

இந்நிலையிலேயே மழைகாரணமாக புதைகுழி அகழ்வு ஒருநாள் பிற்போடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நீதிமன்றில் இன்றையதினம் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதுடன் சகல திணைக்களங்களைச் சேர்ந்தவர்களும் அங்கு முன்னிலையாகவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)

## லிட்ரோ,...

வின்விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இரண்டு எரிவாயு நிறுவனங்களும் 12.5 கிலோ சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரித்துள்ளன.

லாப்பின் புதிய விலை 3 ஆயிரத்து 835 ரூபா. லிட்ரோவின் புதிய விலை 3 ஆயிரத்து 127 ரூபா. (அ-ஒ,இ)

## கா.பொ.த...

தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயிரியல் பிரிவில் மாவட்டத்தின் முதல் 5 இடங்களையும், கணிதப் பிரிவில் முதல் 6 இடங்களையும் பெற்றுள்ளது. உயிரியல் பிரிவில் ஆனந்தஜோதி வித்தியாசாகர், கண்ணன் பவித்திரன், நாகசேனன் சாரங்கன், தர்மலிங்கம் அமலன், ரகுகாந்தன் தனுசன் ஆகியோர் முதல் 5 இடங்களைப் பெற்றுள்ளனர். கணிதப் பிரிவில், சிறிபந்தாகரன் சிநேகன், லெஸ்லி பாஸ்கரதேவன் அபிசேக், சந்திரசேகரம் அபிசேகன், பகீரதன் தீபக், மொஹமட் நிஸ்வர் மொஹமட் இஷாத், விமலசேகரன் கிசாலன் ஆகியோர் முதல் 6 இடங்களைப் பெற்றுள்ளனர். இதேவேளை- இந்துக் கல்லூரியில் 33 மாணவர்கள் 3 ஏ பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

உயிரியல் தொழில்நுட்பத்தில் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி மாணவி சசிகா பாஸ்கரன் முதல் நிலையைப் பிடித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கணிதப் பிரிவில் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தியாகன் தேவகரன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ராமகுமார் கவிப்பிரியா கலைப்பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நிசாந்தன் கணிதப் பிரிவில் முதலிடத்தையும், விதுவர்சன் உயிரியல் பிரிவில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சண்முகம் மாதுளன், உயிரியல் பிரிவில் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த கேதீஸ்வரன் கிரேஸன் ஆகியோர் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். (அ-ஒ,18,110,213)

## இதுவரை...

2018ஆம் ஆண்டு இலங்கை அரச புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரிக்கும் ஏப்ரல் 21 தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பைக் குறிப்பிட்டு இந்த நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானியாவின் 'த ரைம்ஸ்' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

சனல் - 4 இலங்கையில் போர்க்குற்றங்கள் நடந்ததாக பல சர்ச்சைக்குரிய காணொலிகளை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் மீண்டும் இன்று இலங்கை தொடர்பான மற்றுமொரு சர்ச்சைக்குரிய காணொலியை வெளியிடப்போவதாக சனல்-4 ஊடகம் அறிவித்துள்ளது.

தற்போது நாட்டை விட்டு வெளியேறி சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளராகப் பணியாற்றிய அசாத் மௌலானாவே இது தொடர்பான தகவல்களைத் தெரிவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆட்சி மாற்றத்துக்காக நாட்டில் உறுதிப்பாடற்ற தன்மையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்ததாகக் குறிப்பிடப்படும் நபர் பற்றி அதில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய இரகசியங்கள் பல இந்த காணொலியில் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,இ)

## நம்பிக்கையில்லாத்...

கட்சியான தமிழ்த் தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளை கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா நேற்று திங்கட்கிழமை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் புளொட் தலைவர் சித்தார்த்தனுக்கும், ரெலோ செயலர் கோவிந்தன் கருணாகரனுக்கும் விடுத்திருக்கின்றார்.

நாட்டின் சுகாதார நிலை மோசமடைந்திருக்கும் நிலையில் பெரும் எண்ணிக்கையில் மருத்துவர்களும் தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். மருந்துத் தட்டுப்பாட்டால் சாதாரண பொதுமக்கள் பணம் கொடுத்து தனியார் மருத்துவமனையில் அத்தியாவசிய மருந்துகளை வாங்க முடியாத நிலையில் திண்டாடி வருகின்றனர்.

இதனை வைத்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதற்கு ஜனநாயகதமிழ்த் தேசியகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (அ-ஒ,26)

## துப்பாக்கியோடு...

நான்கு மகளீர்களுடன் குருநாகல் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டுக்குச் செல்ல முற்பட்ட சிப்பாய் மாங்குளம் ரயில் நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிப்பாய் விடுமுறையில் வீடு செல்வதற்காகப் புறப்பட்டுள்ளார். அவர் புறப்படும் போது தனது ரி-56 ரக துப்பாக்கியையும் எடுத்துச் சென்றுள்ளார். விடுமுறையில் செல்லும் சிப்பாய் துப்பாக்கியை ஒப்படைக்காது சென்றமையால் முகாமில் பரபரப்பு ஏற்பட முகாம் இராணுவத்தினர் சிப்பாயைத் தேடி பளை ரயில் நிலையத்துக்குச் பறந்தோடிச் சென்றுள்ளனர்.

ஆனால், சிப்பாயோ, அவர்களுக்கு 'தண்ணி' காட்டுவதற்காக, பளை ரயில் நிலையத்துக்குச் செல்லாமல் கொடிகாமம் சென்று அங்கிருந்து குருநாகல் செல்வதற்காக ரயிலில் ஏறிப் பயணத்துள்ளார்.

இராணுவ அணி ஒன்று சிவில் உடையில் பளை ரயில் நிலையத்தில் ஏறி சிப்பாயை தேடியுள்ளது. எனினும் அவரைக் கண்டுபிடிக்கவில்லை. இதன் பின் ரயில் கிளிநொச்சி, அறிவியல் நகரை அடைந்திருந்தது. உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவப் பொலிஸார் மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து சிப்பாயைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் இராணுவப் பொலிஸாரிடம் வழங்கிய தகவல்களின் படி மனைவியோடு ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக, அவரைப் பழிவாங்கவே துப்பாக்கியை எடுத்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். (அ-ஒ,214)

## கையை...

சொல்லப்படவில்லை - இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட 8 வயதுச் சிறுமியின் தாயின் தந்தையார் (பேரனார்) தெரிவித்தார்.

மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது பேர்த்திக்கு கடந்த 22ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. காய்ச்சலுக்காக ஏழாலையில் உள்ள மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு கிருமித் தொற்று இருப்பதாகக் கூறப்பட்டது.

தட்டாதெருவில் உள்ள தனியார் மருத்துவமனையில், குழந்தை மருத்துவ நிபுணரிடம் சிறுமியை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றவேளை காய்ச்சலுக்கு மருந்து வழங்கப்பட்டது. தொடர்ந்து காய்ச்சல் இருந்ததன் காரணமாக திருநெல்வேலி உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிறுமியை அழைத்துச்சென்று, ஒருநாள் விடுதியில் தங்கவைத்திருந்தோம். ஆனால், அங்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்கும் காய்ச்சல் குறையவில்லை. அங்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சிறுமியை அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அன்றைய தினமே இரவு எட்டு மணிக்கு யாழ்ப்பாணம் போதனை மருத்துவமனைக்கு சிறுமியை அழைத்துச் சென்று 12ஆம் இலக்க விடுதியில் சேர்த்தோம். அங்கே சிறுமிக்கு மருந்துகள் கொடுக்கப்பட்டன. ஊசி மருந்தைச் செலுத்துவதற்காக கையில் ஒரு ஊசி போன்ற கருவி (கனுலா) ஏற்றி அதனூடாக மருந்து ஏற்றப்பட்டது.

அந்த மருந்து ஏற்றப்பட்ட பின்னர் கையானது வீக்கம் அடைந்திருந்ததுடன் எனது பேர்த்தி வலியால் துடித்தார். இந் நிலையில் அந்த விடுதியில் கடமையில் இருந்த தாதியருக்கு இது சம்பந்தமாகத் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால், அவர்கள் அதைப் பற்றி கவனம் எடுக்கவில்லை. நோய் எதிர்ப்பு மருந்து ஏற்றினால் அப்படித்தான் இருக்கும் என்று கூறினார்கள்.

அன்று இரவே பேர்த்தியின் கை கறுப்பாக மாறிக்கொண்டிருந்தது. இது குறித்து தாதியர்களிடம் சொன்னபோதும் அவர்கள் எந்த விதமான கவனமும் எடுக்கவில்லை. அடுத்த நாள் காலை மருத்துவர்கள் வந்தபோது இது தொடர்பாகக் கூறப்பட்டது.

நோய் எதிர்ப்பு மருந்து கை முழுவதும் பரவி உள்ளதாகவும் அதனால் கையில் உள்ள நரம்புகள் முழுமையாகச் செயலிழந்து விட்டதாகவும் மருத்துவர் கூறினார். பின்னர் அவசர மருத்துவ சிகிச்சை பிரிவுக்கு குழந்தை மாற்றப்பட்டது. அவர்கள் அந்த நரம்பை வெட்டி சத்திர சிகிச்சை செய்வதாகக் கூறி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். சத்திர சிகிச்சை செய்த பின்னர் குழந்தையை விடுதிக்கு அழைத்து வந்தனர். ஆனால், எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. அடுத்த நாளும் மீண்டும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என அழைத்துச் சென்றனர். அதற்குப் பின்னரும் எந்த முன்னேற்றமும் இல்லை. மீண்டும் அடுத்த நாளும் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் எனக்கூறி அழைத்துச் சென்றனர். சத்திரசிகிச்சைக்கு பின்னர் தான் கை அகற்றப்பட்ட விடயம் எமக்குத் தெரியும்.

கிருமி கைகளுக்கு மேலே வரை சென்றால் முழுக் கையையும் அகற்ற வேண்டிவரும். எனவே மணிக்கட்டு வரை கையை அகற்றியுள்ளோம் எனக் கூறப்பட்டது. ஆனால், மணிக்கட்டுவரை கையை அகற்றுவதற்கு முதல் எங்களுக்கு முழுமையாக எதுவும் சொல்லப்படவில்லை. தற்போதுவரை குழந்தை அவசரசிகிச்சைப் பிரிவில்தான் உள்ளது.

மருத்துவமனையிலுள்ள உயர் அதிகாரிகள் வரை நாங்கள் அறிவித்திருக்கின்றோம். ஆனால், இதுவரை எமக்கு எந்தவிதமான தீர்வும் சொல்லப்படவில்லை. மருத்துவமனையில் தாதியர்களின் அசமந்த போக்கு காரணமாக, அவர்கள் தமது வேலையில் சரியாகச் செய்யாமையால் கை அகற்றப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை - சிறுமியின் பெற்றோரால் பொலிஸ் முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில், சிறுமிக்கு கனூலா இடப்பட்ட மருந்துஏற்றும்போதுஒருதடவை சேலைன் கலக்காமல் ஏற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,5,27)

## சீரற்ற...

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நாவலப்பிட்டியில் சுவர் அமைக்க அத்திபாரம் அமைக்கும்பணியில்ஈடுபட்டிருந்தபோது, மோசமான வானிலை காரணமாக மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தாரென நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். இதற்கிடையில், ஜின் ஆற்றில் குளிக்கச்சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மேலும், ரக்வான துலி நீர்வீழ்ச்சியில் இருந்து தவறி விழுந்து மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்கிடையில், தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், தென்மேற்குப் பகுதியில் கடுமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஒ,இ)

## மீற்றர்...

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜெயராசா அருள்பாலினி (வயது - 34) என்பவரே வீட்டில் எவரும் இல்லாத வேளை உயிர் மாய்த்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தாயாவார்.

பெண்ணின் குழந்தை நீண்டநேரமாக அழும் சத்தம் கேட்டு அயலவர்கள் வீட்டின் கதவைத் திறந்து பார்த்தபோது உயிரிழந்த நிலையில் பெண் காணப்பட்டுள்ளார். தாயாரின் காலை பிடித்தபடி 3 மாதக் குழந்தையும் அழுதுகொண்டிருந்துள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ,26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அழகுக்கு சத்திர சிகிச்சை பிரபல நடிகை உயிரிழப்பு



பிரபல நடிகையும் மொடலுமான அர்ஜென்ரீனாவைச் சேர்ந்த சில்வினா லூனா என்பவர் பின்னழகுக்காக செய்த சத்திரசிகிச்சை காரணமாக உடல் நலன் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். சில்வினா லூனா தனது 43 ஆவது வயதில் 2011ஆம் ஆண்டில் குறித்த சத்திர சிகிச்சையை செய்துகொண்டார். இதன்காரணமாக சிறுநீரக பிரச்சினைகளால் அவதியுற்று சிகிச்சைபெற்று வந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் காலமானார். (ச)


### வேலைவாய்ப்பு

மல்லாகத்தில் இயங்கும் தொழில் நிறுவனத்துக்கு கணினி அறிவுடைய பில் கிளாக் தேவை.
(ஆண்கள் விரும்பத்தக்கது)

**077 703 6904** (CS/26280 AH

### காணி விற்பனைக்கு

ராஜபாதை வீதி, கரந்தன் - இராமபிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.

**077 307 5198** (CS/26275 AH

### தவறவிடப்பட்டுள்ளது

கோண்டாவிலிலிருந்து உரும்பிராய் சந்திக்கு இடையில் பலாலி வீதியில் **ரதிகரன் துவாரகன்** (200009003251) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**076 395 9199** (CS/51970 AH

### வேலைவாய்ப்பு

யாழ். நகரில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் பணி வெற்றிடங்கள் உள்ளன. தொடர்பு கொள்ளவும்.

1. Receptionist (Girls)
2. Maintenance (AC mechanic)
3. Heavy vehicle driver

**P.No:076 6248 529**
**Email : hr@valampurihotel.com**

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **15 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம், வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம், நல்ல சூழல்.
- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.


**நிலப்பரப்பு**
**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு **076 755 8606, 077 8743 204, 077 2880 152.**


## மரண அறிவித்தல்

### கந்தசாமி நாகநந்தகுமாரன்

**தோற்றம்** 22.06.1960 — **மறைவு** 03.09.2023



அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தோணிக்கல் லக்சபானா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நாகநந்தகுமாரன் (சோதிட திலகம்) கடந்த (03.09.2023) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டபிள்ளை - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலவதனியின் பாசமிகு கணவரும், அஜித்குமார் (பொறியியலாளர்), கோசிகன் (கணினி விஞ்ஞானம் - திருகோணமலை பல்கலைக் கழகம்), அபிநயா (மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கோசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2023) புதன்கிழமை வவுனியா தோணிக்கல்லிலுள்ள இல்லத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS/25806)AH-1

## மரண அறிவித்தல்



### செல்வி அந்தோனிப்பிள்ளை பிறக்சிற் (ராணி)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அந்தோனிப்பிள்ளை பிறக்சிற் (ராணி) கடந்த (30.08.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், திரேசா புஸ்பம், காலஞ்சென்ற சவுந்தரம் மற்றும் சிசிலியா (ஜெயம்), பற்றிக் இம்மானுவேல், மேரி இமெல்டா, டோமினிக் (ராசா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மேரியோசவ் (பொன்ராசா) மற்றும் எலிசபேத் நேசராணி, லியோ மரியதாசன், சுகுணா, ஜேனாதிராசா, கீதாஞ்சலி ஆகியோரின் மைத்துனியும், கொலஸ்ரிக்கா (சாந்தம்), கிறிஸ்ரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள White House மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று (05.09.2023) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை நல்லாயன் வீதியில் அமைந்துள்ள குமார் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை (06.09.2023) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS/51971)AH-1

075 085 1136 - டோமினிக், +1(778) 863-0244 - பற்றிக் இம்மானுவேல்

## மரண அறிவித்தல்

**அன்னை மடியில்** 21 . 07 . 1929



**ஆண்டவன் அடியில்** 02 . 09 . 2023

### திருமதி தெய்வநாயகி குழந்தைவேலு

யாழ். உரும்பிராயை பிறப்பிடமாகவும், மெல்போன் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி குழந்தைவேலு கடந்த (02.09.2023) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - சின்னம்மா தம்பதிகளின் மகளும், குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், பொன்னம்பலம், பொன்னுத்துரை, தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்ரூபன், சிவரூபன், ஜெயரூபன், முகுந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தமலர், சிவகுமாரி, ஹரிணி, மலர்விழி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியதர்ஷினி - றோமி, அர்ச்சனா, சிவானி, கிஷோர், லவன் - எமி, அருண், திவ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக நாளை (06.09.2023) புதன்கிழமை மாலை 6 மணிமுதல் 7மணிவரை Tobin Brothers Funerals, 147 - 149, Park Road, Cheltenham, Vic 3192 என்னும் முகவரியில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.09.2023) வியாழக்கிழமை காலை 9.15 - 11.00 வரை Springvale Blair, 3rd Avenue, Chapel 600, Princess Highway, Springvale இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/51971)AH-1

தகவல் : குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.